வகுப்பு : 7

தேர்வு எண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6x1=6

1. வான் + ஒலி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ------

(அ) வான்ஒலி (ஆ) வானொலி (இ) வாவொலி (ஈ) வானெலி

2. தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று ------

(அ) உருது (ஆ) இந்தி (இ) தெலுங்கு (ஈ) ஆங்கிலம்

3. குற்றியலுகரத்தின் வகைகள் -------

(அ) ஆறு (ஆ) நான்கு (இ) மூன்று (ஈ) ஐந்து

4. வாழை, கன்றை ------

(அ) ஈன்றது (ஆ) வழங்கியது (இ) கொடுத்தது (ஈ) தந்தது

5. ஆசிய யானைகளில் ஆண் – பெண் யானைகளை வேறுபடுத்துவது ------

(அ) காது (ஆ) தந்தம் (இ) கண் (ஈ) கால்நகம்

6. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ------

(அ) ஐகாரக்குறுக்கம் (ஆ) ஔகாரக்குறுக்கம்

(இ) மகரக்குறுக்கம் (ஈ) ஆய்தக்குறுக்கம்

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 3x2=6

7. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை

8. மொழியின் இரு வடிவங்கள் யாவை?

9. குற்றியலிகரம் என்றால் என்ன?

10. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

11. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?



www.Padasalai.Net

III. பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிமாறாமல் எழுதுக. 3+2=5

12. "அருள்நெறி அறிவைத்" எனத் தொடங்கி "அன்பறமே" என முடியும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக.

13. "ஏதிலார்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2x3=6

14. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

15. கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன.

16. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

V. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக. 1x5=5

17. பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

18. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.

19. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 2x1=2

20. இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.

மழலை பேசும் ____ அழகு.

இனிமைத்தமிழ் ____ அழகு.

21. பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.

அரசர்கள் நல்லாட்சி செய்தார்.

CH / 7 / Tam / 2

www.Padasalai.Net